மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்பு 1967 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ஆம் தேதி உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே பதவிப் பிரமாணம் எடுத்தும், 1967 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28-ஆம் தேதி அன்று இரண்டே இரண்டு கேள்விகளுக்குத்தான் பதில் சொல்ல முடிந்தது. நீங்கள், அந்தந்த இலாக்காக்களிலே உள்ள அதிகாரிகள் 42 நாட்களை மினிமமாக வைத்துக்கொள்ளாமல் குறுகிய காலத்தில் வினாக்களுக்கு விடைகளை அனுப்ப வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதைப்பற்றி ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. நடைமுறையில் கேள்விகளுக்குப் பதில் சேகரிக்கக் கால தாமதம் ஆகலாம். ஆனால் துரிதப்படுத்த அறிவுரை கூறலாமே தவிர, பாயின்ட் ஆஃப் ஆர்டரின் கீழ் என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. இருந்தாலும் நான் கவனிக்கிறேன்.

(2) அறிவிப்பு.

ஆளுநர் அவர்களிடமிருந்து வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18-ஆம் நாளிட்ட கீழ்க்காணும் செய்தி வரப் பெற்றது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'' நான் 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் தேதியன்று சட்டமன்றக் கூட்டத்தைத் துவக்கி வைத்து நிகழ்த்திய உரைக்கென சட்டமன்றப் பேரவை நிறைவேற்றியுள்ள நன்றியறிவிப்புத் தீர்மானம் கிடைக்கப் பெற்றமைக்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ''

அடுத்து, 1977-78 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளிப்பார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS